உடனுதவும் 13-11-1991

# அரசாங்க ஊழியருக்கு நூறுரூபா சம்பள உயர்வு

## பட்ஜட்டில் ஆலோசனை

(கொழும்பு)
அரசாங்கத்துறை ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுவோருக்குமான வாழ்க்கைச் செலவுப் படி நூறு ரூபாவினால் அதிகரிக்க படவிருப்பதாக நேற்று நாடாளுமன்றத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 27 இதழ்: 273
யாழ்ப்பாணம் புதன்கிழமை 13-11-1991

## அமைச்சர் தொண்டமான் புதுடில்லி பயணம்

(கொழும்பு)
இந்திய சிவில் விமான சேவைத் திணைக்களத்தின் அழைப்புக்கிணங்க கிராமியக் கைத்தொழில், உல்லாசப் பயணத்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் இன்று புது

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கடும் விமானத் தாக்குதல்

(வவுனியா)
வவுனியாப் பகுதியில் நேற்றும் நேற்று முன் தினமும் கடுமையான விமானத் தாக்குதல் இடம்பெற்றுள்ளன.
வவுனியா பாலமோட்டைப் பகுதியில் 3 குண்டு வீச்சு விமானங்

(4-ம் பக்கம் பார்க்க)

### போர் முடிவுக்கு வருமாயின் நாடு சுபீட்சமடையும்

# வடக்கு - கிழக்கு யுத்தத்தினல் பெருமளவு பணம் வீண்விரயம்

## பிரதமர் விஜயதுங்கா கவலை

(கொழும்பு)
"வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து நடைபெறும் யுத்தத்தினல், பெரும் தொகையான பணம் வீண்விரயமாகிறது. இந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படுமாயின், நாடு வளம் பெற்றுச் சுபீட்சம் அடையும்." இவ்வாறு பிரதமரும், நிதியமைச்சருமான திரு. டி. பி. விஜயதுங்கா நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

8-வது வரவு செலவுத் திட்டத்தை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது: வடக்கு-கிழக்கு யுத்தம் காரணமாகப் பாதுகாப்புச் செலவினங்களைப் பெருந்தொகையான பணம் செலவு செய்யப்படுகிறது.

யுத்தத்தினுல் அதிகளவாகும் மக்களைப் பராமரிப்பதற்கெனப் பெருந்தொகையான பணம் அழிந்து போகின்றது. நாட்டில் சமாதானம் மீண்டும் நிலவுமானுல் தெற்காசிய பிராந்தியத்திலேயே பொருளாதார வளர்ச்சிபெற்ற நாடாக இலங்கை திகழும்.

புதிய கொள்கை, புதிய நோக்கு என்பனவற்றின் அடிப்படையில் நாட்டில் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்த ஜனாதிபதி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு நாட்டின் சகல மக்களும் பூரண ஆதரவு வழங்க வேண்டும்.

## சமாதான முயற்சிக்கு அரசு தரப்பில் வரவேற்பு

(கொழும்பு)
அமைச்சர் தொண்டமானின் சமாதான முயற்சிக்கு அரசு தரப்பில் அதிக வரவேற்பு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

திரு. தொண்டமான் முன்வைத்துள்ள யோசனைகளில் பல அரசு தரப்பு யோசனைகளாகவே அமைந்திருப்பதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

### க. பொ. த. (சாதாரணம்)

## விசேட பரீட்சை நடைபெறமாட்டாது

(கொழும்பு)
1990ம் ஆண்டுக்கான க. பொ. த. (சாதாரண) விசேட பரீட்சை இம்முறை நடைபெறுவதற்கான சாத்தியங்கள் இல்லையென கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம். டி. டி. பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சையை இவ்வருடம் நடத்துவதற்கான கால அவ

(4-ம் பக்கம் பார்க்க)

## பொருளாதார தடையை நீக்கக்கோரி ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)
வடபகுதி மீது, ஸ்ரீலங்கா அரசு நடைமுறைப்படுத்தி வரும் பொருளாதாரத் தடையை நீக்குமாறு கோரியும், எரிபொருள், உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப்

(4-ம் பக்கம் பார்க்க)

## 30 கோடி ரூபா மீன்பிடி உபகரணங்கள் சேதம்

(மன்னர்)
வடக்கு-கிழக்குப் பகுதியில் நடைபெற்றுவரும் யுத்தத்தினுல் மன்னூர்ப் பகுதியில் 30 கோடி ரூபா பெறுமதியான மீன்பிடி வள்ளங்கள், வலைகள், மற்றும் உபகரணங்கள் சேத

(4-ம் பக்கம் பார்க்க)

### ஆயுத கடத்தல் குற்றச்சாட்டு

## நான்கு இலங்கைத் தமிழர் சென்னையில் நேற்று கைது

(சென்னை)
இலங்கைப் போராளிகளுக்கு ஆயுதம் கடத்த முயன்றதாக 4 இலங்கை தமிழர்கள் குற்றம் சாட்டப்பட்டு பொலிஸாரால் நேற்று சென்னை சந்தோம் அருகில் கைது செய்யப்பட்டனர்.

ஆயுதம் கடத்த கைவசம் வைத்திருந்த இயந்திரப் படகும் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்த 4 பேரும் மண்டபம் முகாமில் தங்கியிருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### "யாழ். மக்களுக்கு தேவையான

## அத்தியாவசிய பொருள்களை அனுப்ப முயற்சி எடுப்பேன்"

— தேவநேசன் நேசையா

(யாழ்ப்பாணம்)
"யாழ்ப்பாண மக்களுக்கு தற்போது மிக அவசியமாகத் தேவைப்படும், உணவுப் பொருட்கள் மண்ணெண்ணை, சவர்க்காரம் ஆகியவற்றை கூடுதலாக இங்கு அனுப்புவதற்கு நான் முயற்சி எடுப்பேன்"

இவ்வாறு யாழ். செயலகத்தில் நேற்று யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர்

(4-ம் பக்கம் பார்க்க)

## "மாவீரர் நாள் விடுதலை விரும்பும் உலகிற்கே உதாரணமானது"

(யாழ்ப்பாணம்)
"தமிழீழ மாவீரர்நாள் வரலாறு, விடுதலை விரும்பும் உலகிற்கே உதாரணமானது" இவ்வாறு மாவீரர்நாள் குழு வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"தமிழீழத்தில் இன்று ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடிவருகின்றனர். தமது மண் அந்நியரின் ஆக்கிரமிப்பிற்குள்ளாகியும், பல்வேறு விதமாக தமது மக்கள் ஒடுக்கப்பட்டு வருவதையும் உணர்ந்து, அதனை நேரடியாகவே அனுபவித்தினூடாக அறிந்து. இக்கொடுமைகளை வெறுமனே பார்த்துக்கொண்

(4-ம் பக்கம் பார்க்க)

### "சார்க் மாநாடு

## குழம்பியதற்கு இந்திய நிர்ப்பந்தமே காரணம்"

(கொழும்பு)
கொழும்பில் நடைபெற இருந்த சார்க் மாநாடு குழம்பியதற்கு சார்க் நாடுகளின் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என்ற இந்தியாவின் நிர்ப்பந்

(4-ம் பக்கம் பார்க்க)

